


▲ டாக்டர் அப்துல்கலாம் 3-வது நினைவு மாநாடு டெல்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சர்வதேச அளவில் கட்டமைப்பை மேம்படுத்தி பயணிகளுக்கு வசதி அளிப்பதில் புதுமைகளைப் புகுத்திய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு 'புதிய கண்டுபிடிப்புக்கான கலாம் ஆளுமை விருது' (கிகா) வழங்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், தலைமை பொதுமேலாளர் வி.கே.சிங் ஆகியோரிடம் நிதி ஆயோக் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ்குமார் விருதை வழங்கினார்.

# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு புதிய கண்டுபிடிப்புகளுக்கான 'கிகா' விருது

■ சென்னை

சர்வதேச அளவில் கட்டமைப்பை மேம்படுத்தி பயணிகளுக்கு வசதி அளிப்பதில் புதுமைகளை புகுத்திய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு புதிய கண்டுபிடிப்புக்கான கலாம் அரசு விருது (கிகா) விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுமை மற்றும் சிறந்த நிர்வாகத் திறனுக்கு விருதுகள் வழங்கும் விழா மற்றும் டாக்டர் அப்துல்கலாம் 3-வது நினைவு மாநாடு டெல்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட திட்டத்தில் சர்வதேச அளவில் கட்டமைப்பை மேம்படுத்தி புதுமைகளை புகுத்தி, பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**சிறந்த நிர்வாகம்**

மேலும் மின்சாரத்தை சேமிக்கும் வகையில் தொழில்நுட்பம் உட்புகுத்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஏற்றவாறு பசுமை கட்டிடங்கள் அமைத்தல், மேலும், 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் சிறிய மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைத்தல் போன்ற சிறந்த நிர்வாகத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

எனவே, இந்த பணியை பாராட்டி நிதி ஆயோக் துணை தலைவர் டாக்டர் ராஜீவ்குமார் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், தலைமை பொதுமேலாளர் வி.கே.சிங் ஆகியோரிடம் புதிய கண்டுபிடிப்புக்கான கலாம் அரசு விருதை (கிகா) வழங்கினார்.